**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 283/2022**

**Deposition of Witnesses for PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு.**தீனதயாலன்** | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **07.11.2024.**

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது ராமநாதபுரம் போக்குவரத்து காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். முன்பு மண்டப காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது 24.04.2020ம் தேதி இரவு 20.15 மணிக்கு மண்டபம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வளையர்வாடி NH87 தேசிய நெடுஞ்சாலையில் காவலர் பிரபாகரன், சார்பு ஆய்வாளர் சிராஜிதீன், கிராம நிர்வாக அலுவலர் திரு.செந்தில்குமார், கிராம உதவியாளர் கார்மேகம் வாகன தணிக்கையில் ஈடுப்பட்டபோது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த வாலாந்தரவை தேவர் நகர், முருகேசன் மகன் துரைபாண்டி என்ற உருளை, வயது 36/20 மற்றும் சூடவளைகுச்சு நாகு மகன் ராஜ்குமார், 24/20 அவர்கள் ஒட்டி வந்த இருசக்கர வாகனம் டி.என்.65 AH 5405 Yemaha Fazer வாகனத்தின் பவுச்சில் 1.500 கிகி கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் எலக்ட்ரானிக் தராசில் எடை போட்டு பார்த்தபோது தலா 50 கிராம் சாம்பில் எடுத்து மீதமுள்ள 1.400கிகி கஞ்சாவை வெள்ளை நிற பேப்பரில் வைத்து காக்கி நிற செலோ டேப் ஒட்டி போலீஸ் பட்டன் சீல் வைத்தும் எதிரி மற்றும் வாகனத்துடன் நிலையம் கொண்டு வந்து மண்டபம் காவல் நிலையம் வந்து கு.எண்.157/2020 சட்டப்பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) NDPS Act -ன் படி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

இந்த வழக்கு சம்பந்தமாக தகவலின் பேரில் தான் ரைடுக்கு சென்றோம். மேற்படி தகவலை சார்பு ஆய்வாளர் எழுத்து மூலம் எழுதினாரா என்றும் அதை மேலதிகாரிக்கு கொடுத்தாரா என்றும் எனக்கு தெரியாது. நான் எந்த ஆவணங்களிலும் சாட்சி கையெழுத்து இடவில்லை என்றால் சரிதான். நான் எந்த ஆவணங்களையும் எழுதவில்லை என்றால் சரிதான். என்னை ஆய்வாளர்

விசாரித்தபோது சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்தில் எல்க்ட்ரானிக் தராசு உள்ளது. அது Property register -ல் எழுதப்பட்டுள்ளது. அதில் எத்தனை வாகனங்களை சோதனை செய்தோம் என்பது குறித்து வாகன சோதனை பதிவேட்டில் சார்பு ஆய்வாளர் குறித்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. தற்போது எந்தெந்த ஆவணங்களை சோதனை செய்தோம் என்று என்னால் சொல்ல இயலாது. ஆவணங்களை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் சம்பவம் இல்லை என்றும், சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளை பிடிக்கவில்லை என்றும், எதிரிகளிடமிருந்து கஞ்சா எதுவும் கைப்பற்றவில்லை என்றும் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் நான் மேலதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணற்க தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.